இரட்சிப்பு

## நிலத்தின் / மனித இருதயம் வகை

(விதை – வேத வசனம் நிலம் – உங்கள் மனம்) மத் 13:1–9, 18–23, மாற் 4:1–9, 13–20, லூக் 8:4–8, 11–15

| வழியருகே (வழி) | கற்பாறையான நிலம் (பாறை) | முள்ளுள்ள இடங்கள் (முள்) | நல்ல நிலம் (நல்ல) |
|---|---|---|---|
| இறுகிபோன வழியோரம் மனிதர்களால் மதியுண்டன, பறவைகளால் பட்சித்துப் போடப்பட்டன | பாறைகளுக்கு மேல் படிந்த ஆழமற்ற மண் ஈரமில்லாததினால் உலர்ந்து போயின | முட்கள் நிறைந்த நிலம் முள்ளுகளால் வளராமல் நெருக்கப்பட்டன. | நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவன். |
| இரட்சிக்கப்படாதவர்கள் (உதட்டளவில்) பேச்சளவில் அறிக்கை செய்பவர்கள் | | | உண்மையான மனமாற்றம் பெற்றவர்கள். |
| வசனத்தை மேலோட்டமாகக் கேட்டனர். பிசாசானவன் வசனத்தை பறித்துச் செல்வது மிகவும் எளிதாயிருந்தது.<br>• இருதயம் கடினமானது<br>• பிடிவாத குணமுள்ளவன்<br>• உள்ளம் நொறுங்குவதில்லை<br>நற்செய்தியைக் குறித்து உணர்வற்றவன் நற்செய்தியைக் கேட்கிற பாவி அசைக்கப்படுவதில்லை. | வசனத்தை கேட்டனர் வசனத்தின் நிமித்தம் உபத்திரவமும் துன்பமும் கஷ்டமும் உண்டானவுடன் கிறிஸ்தவ விசுவாசத்தை கைவிட்டனர். வசனம் தங்களை நொறுக்குவதற்கு இடம் கொடுக்கவில்லை. கிறிஸ்தவனாக இருப்பது புகழ்ச்சிக் குரியது இலாபமாக காணப்படும் வரை தன்னை | சிறிது காலம் நல்ல முறையில் முன்னேறி வருவதாகத் தோன்றும், அவர்கள் உண்மையற்றவர்கள் என்பதை அவர்களது உறுதியற்ற தன்மை வெளிப்படுத்தும். உலக கவலை, ஐசுவரியத்தின் மயக்கம் (பண ஆசை) சிற்றின்பங்கள் பிற காரியங்கள் மீதுள்ள விருப்பம் வசனத்தை நெறுக்கி போடுகிறதினால் பயனற்று போவான். தங்கள் தொழிலிலும், உலக வேலைகளிலும் செல்வந்தராக மாற | உண்மையான விசுவாசிகளை குறிக்கிறது. இருதயம் உத்தமமும் நன்மையுமானவை. தேவ வசனம் தங்கள் வாழ்வை மாற்ற அனுமதிக்கிறவர்கள் வசனத்தை கேட்கிறவன், உணருகிறவன், புரிந்து கொண்டவன் ஏற்றுக் கொள்கிறவன் கனி, அதிக கனி, மிகுந்த கனி 30, 60, 100 சதவீதம் பலன் தருபவன். (வெவ்வேறு அளவில் கனி கொடுக்கும் நிலைமை காணப்படுகிறது). புரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வமுள்ளவராக விசுவாசிக்க ஆயத்தமுடையவராக கீழ்படிய மனதுள்ளவராக கேட்டனர். |

வேதாகமம்
நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

| | | | |
|---|---|---|---|
| | கிறிஸ்தவன் என கூறிக் கொள்வான்.<br>வசனத்தை சந்தோஷத்தோடு ஏற்றுக் கொள்கிறான்.<br>உண்மையற்ற தன்மையை உபத்திரவம் வெளிப்படுத்திக் காட்டும். | வேண்டுமென்கிற இச்சையிலும் மூழ்கி ஆவிக்குரிய காரியங்களில் விருப்பத்தை இழந்து தங்களை கிறிஸ்தவர் என்று சொல்லிக் கொள்வதையும் விட்டு விடுகின்றனர். | பிறர் காண்பதற்கு ஏற்றபடி சத்தியத்தை பிரசங்கித்து அதன்படி வாழ வேண்டும்.<br>உண்மையாகவே மறுபடியும் பிறந்தவர்கள் வசனத்தை ஏற்றுக் கொள்ளப்பட்டு என்ன விலை வேண்டுமானாலும் கொடுக்க ஆயத்தமாகியிருக்கின்றனர்.<br>உலகமோ, மாம்சமோ, பிசாசோ இவர்களுடைய நம்பிக்கையை அசைப்பதில்லை. |
| பறவைகள் தின்றன | விதைகள் விரைவாக முளைத்தன, ஆனால் வேர் ஆழமாகச் செல்ல முடியவில்லை. | விதைகள் முளைத்தன, முட்கள் மிகுதியாக இருந்த காரணத்தினால் அவை வளரவில்லை. | விதைகள் முளைத்தன, வளர்ந்தன சில நூறாகவும், சில அறுபதாகவும், சில முப்பதாகவும் பலன் தந்தன. |
| நற்செய்தியை ஏற்க மனமற்ற மனிதர்களை குறிக்கிறது.<br>• கேட்டும் உணராதிருக்கிறார்கள்.<br>• புரிந்து கொள்ள மனமற்றவர்கள்<br>புரிய முயலா உள்ளங்களில் விழுந்தவை | சோதனை காலத்தில் பின்வாங்கி போகிறவர்கள் (நம்பிக்கையை விட்டு விடுவார்கள்) | அறைகுறை மனதுடன் ஏற்றுக் கொண்டவர்கள் | உண்மையாகவே மறுபடியும் பிறந்தவர்கள் |

இரட்சிப்பு
நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

இரட்சிப்பு







Parable Bible Printables



## The Parable of the Sower

The Seed is the Word of God




What type of Soil are You?

Is God Growing in Your Heart?